THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

MCOP.No.31/2019

Deposition of RW1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 03.11.2023.

Evidence Recorded Time: 12.26 P.M to 01.00 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சித்ரா | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | முருகேசன் | **Calling** | : | இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலர், மேட்டூர் |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை:-**

நான் மேட்டூர் வட்டார போக்கு வரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல மேட்டூர் வட்டார போக்கு வரத்து அலுவலருக்கு அழைப்பாணை வந்ததன் மேற்படி அலுவலகர் அனுமதிக் கடிதம் வழங்கியதன் பேரில் சாட்சியம் அளிக்க நான் அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களுடன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். விபத்து காலத்தில் மகேந்திரா வேன் ஓட்டுநரான ஆரோக்கியசாமிக்கு கமர்சியல் வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் உள்ளதா என்று கேட்கப்பட்டுள்ளது. அவருக்கு இலகுரக வாகனம் ஓட்டுவதற்குதான் ஓட்டுநர் உரிமம் உள்ளது, கமர்சியல் வாகனம் ஓட்டுவதற்கு வில்லை இல்லை. ஆரோக்கியசாமிக்கு வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமம் எ.ம.சா.ஆ.1 ஆகும். மேற்படி ஆரோக்கியசாமி கமர்சியல் வாகனம் ஓட்டுவதற்கு அதற்கான பேட்ஜ் இல்லாமல் வாகனத்தை இயக்கியதற்கு எங்கள் அலுவலகம் மூலம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி தெரியாது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை யாருக்கு அனுப்பப்பட்டது என்றால் மேட்டூர் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு வந்தது. எங்கள் அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் பணியில் உள்ளாரா என்றால் உள்ளார். நான் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். அதனால் எனக்கு

தொழில்நுட்பமான கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியாது என்றாலும் சரிதான். எங்கள் அலுவலக ஆவணங்களின் படி ஓட்டுநர் உரிமம் எந்த தேதியில் வழங்கப்பட்டுள்ளது என்றால் 27.03.2006–ல் வழங்கப்பட்டுள்ளது. அழைப்பாணையில் ஆரோக்கியசாமிக்கு என்ன முகவரி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆரோக்கியசாமி, த/பெ.பெரியநாயகம், 2/46, மாசிலாபாளையம் அஞ்சல், மேட்டூர் 636 452 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் இன்று தாக்கல் செய்த ஓட்டுநர் உரிமத்தில் என்ன முகவரி உள்ளது என்றால் 2/217, புதிய எண்.2/236 என்று உள்ளது. ஓட்டுநர் உரிமத்தில் உள்ள முகவரிக்கும், அழைப்பாணையில் உள்ள முகவரிக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். அழைப்பாணையில் ஓட்டுநர் உரிம எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஓட்டுநர் உரிம எண் இருந்தால் கணினி வழியில் அனைத்து தகவல்களையும் எடுக்க முடியும் என்றால் சரிதான். ஓட்டுநர் உரிம எண் குறிப்பிடாமலும், முகவரி தவறாகவும் கொடுக்கப்பட்டுள்ளதால் எதன் அடிப்படையில் ஓட்டுநர் உரிமம் பற்றிய தகவல்களை எவ்வாறு கூறுகிறேன் என்றால் சென்ற வாய்தாவில் வாய்மொழியாக கூறப்பட்டதன் அடிப்படையில் தகவல்களை கூறுகிறேன். எங்கள் அலுவலகத்திற்கு வந்த அழைப்பாணையில் TN 74 A 3939 என்ற வாகனத்தின் எண் குறிப்பிடப்பட்டிருந்தது. அழைப்பாணையில் எங்கள் அலுவலகத்திற்கு வரும் போது TN 74 A 3434 என்றுதான் வந்தது, அதில் 3939 என்பது வழக்கறிஞரால் திருத்தி கொடுக்கப்பட்டது. மேற்படி பதிவெண் கொண்ட வாகனம் என்ன வகையான வாகனம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி பதிவெண் கொண்ட வாகனம் தனிநபர் வாகனமா அல்லது கமர்சியல் வாகனமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4 ஆவணத்தில் 5வது காலத்தில் LMV இலகு ரக வாகனம் என்று கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலியாக உள்ள இலகு ரக வாகனத்தின் எடை எவ்வளவு என்றால் 7,500 கிலோ ஆகும். விபத்து சம்மந்தப்பட்ட வண்டி என்ன வகையான வண்டி என்று தெரியாது என்றாலும், விபத்து சமயத்தில் மேற்படி வாகனம் லோடு உடன் இருந்ததா அல்லது அன்லோடாக இருந்ததா என்று தெரியாது என்றாலும் சரிதான். வண்டியின் எடையை வைத்துதான் இலகு ரக வாகனமா அல்லது கன ரக வாகனமா என முடிவு செய்யப்படும் என்றால் சரிதான். இலகு ரக வாகன ஓட்டுநர் உரிமம் வைத்துள்ளவர்கள் 7,500 கிலோ எடையுள்ள அனைத்து வகையான வாகனங்களையும் ஓட்ட முடியும் என்றால் ஓட்டமுடியும். பேட்ஜ்

என்பது ஓட்டுநர் உரிமத்தில் குறிப்பிடப்படும் ஒரு மேற்குறிப்பு என்றால் போக்குவரத்து வாகன விதிக்குரிய மேற்குறிப்பாகவும். விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனம் போக்குவரத்து வாகனமா என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனத்தின் உரிமையாளர் யார் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். தொழில்நுட்பமான கேள்விகளுக்கு என்னால் பதில் அளிக்க முடியாது என்றாலும், அதற்கு மோட்டார் வாகன ஆய்வாளரால்தான் சொல்ல முடியும் என்றாலும் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனத்தை நேரில் ஆய்வு செய்த பிறகுதான் கொடுப்பார்கள் என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் கனரக வாகனமா என்று சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்ட வண்டி போக்குவரத்து வாகனமாக இருந்திருந்தால் ஆய்வறிக்கையில் சொல்லியிருப்பார்கள் என்றால் ஆமாம். விபத்திற்கு சம்மந்தப்பட்ட வாகனம் போக்குவரத்து வாகனம் இல்லை என்பதால் தான் அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

ஒம்/–RW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.